# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 120
இதழ்: 10

27—05—1994
விலை ரூபா 5-00


யாழ். மேய்ப்புப் பணி மாநாட்டு
முதற்கட்ட நடவடிக்கை
யாழ் ஆயரின்
சுற்று மடல்

பார்க்க பக்கம் 3

29 - 05 - 1994
தமதிரித்துவ
ஞாயிறு
சிறப்பு வழிபாடுகள்
"கிறிஸ்தவ குழும வாழ்வு"

University of Jaffna ... RECEIVED 1994 ... Library

* கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது விண் *

## முதற்கட்ட செயல்திட்டத்திற்கான புதிய தரிசன நோக்கு

# நாம் இறை வார்த்தையில் உதித்த ஓர் இறை மக்கள் சமூகம்

**"பரிசுத்த ஆவியின் ஆற்றலால், அவரது செயலால் மாநாட்டின் முடிவில் பெற்றுக்கொண்ட தூண்டுதல்கள் பல. இவற்றைச் சிந்திக்கும் வேளையில், முதற்கட்டமாக, நாம் இறை வார்த்தையில் உதித்த ஓர் இறைமக்கள் சமூகம் என்ற உண்மையை ஆழப்படுத்த முயல்கிறோம்."**

யாழ். மேய்ப்புப்பணி மாநாட்டில் பெற்ற புதிய தரிசனப் பார்வையில், கட்டம் கட்டமாக செயல் திட்டங்களை அமுல்படுத்தும் நோக்கத்துடன், முதற் செயற்பாடாக இறைவார்த்தைப் பணியை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தேவைக்கு முதன்மை கொடுத்து, யாழ் ஆயர் இ. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தமது இறைமக்களுக்குத் தூயஆவியானவரின் விழாவன்று விடுத்த சுற்றுமடலில் மேற்கண்டவாறு கூறுகிறார்.

பங்குகளில் மேய்ப்புப்பணிகளை நிரைப்படுத்தும் பொழுது இறைவார்த்தைப் பணிக்கு முன்னுரிமை கொடுத்து, வேதாகமக் குழுக்களை அமைத்து, கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள் நடாத்த அழைப்பு விடுகின்றார் ஆயர். பல்வேறு திட்டங்கள் பங்குகளில் விரைவாக செயற்படுத்தப்பட்டு, திருமறைநூல் அறிவு பெருக, பங்குத் தந்தையர்களையும் மேய்ப்புப்பணி மாநாட்டில் கலந்து கொண்ட எல்லாப் பிரதிநிதிகளையும், மற்றும் சகல கிறிஸ்தவ விசுவாசிகளையும், திட்டங்கள் தீட்டி துரிதமாக உழைக்குமாறு ஆயர் அவர்கள் இச்சுற்றுமடல் மூலம் கேட்டுக் கொள்ளுகின்றார்.

## மானிப்பாய் மறைக்கோட்டத்தில் ஆச்சேஸ் விழா

மானிப்பாய் மறைக்கோட்ட மரியாயின் சேனை "கூறியா" வைச் சேர்ந்த 16 பிரசீடியங்கள் ஒன்றிணைந்து, கடந்த ஞாயிறு— 15 - 05 - 94 — காலை 9 - 30 மணிக்கு "ஆச்சியஸ்" விழாவை முதல் தடவையாக நடாத்தியது.

மறைக்கோட்ட முதல்வரும் மானிப்பாய் 'கூறியா' வின் ஆன்ம வழிகாட்டியுமாகிய அருள்தந்தை யேம்ஸ் பத்திநாதர் சிறப்பு மறையுரை ஆற்றினார். மரியாயின்கொடியின் கீழ் பணிபுரியும் சேனையாளரை "அடிபாட்டுக்குழு" வுக்கு ஒப்பிட்டு, அவர்கள் திருமறையைப் பாதுகாத்து வளர்ப்பதற்கு என்றும் விழிப்பாயிருக்க வேண்டியதன் அவசியத்தையும் தேவையையும் எடுத்துரைத்தார். அவர்கள் ஆற்றும்பணிகளின் மகத்துவத்தையும் முக்கியத்துவத்தையும் விபரித்து, அவர்களின் விசேட அழைப்பு காத்திரமானதும் கஷ்டமானதுமாயிருப்பதால், கடமை உணர்வு, பொறுப்புணர்ச்சியுடன் சேவைபுரியும் மனநிலையின் தேவையை எடுத்து விளக்கினார்.

அங்கு வந்திருந்தஏறத்தாழ 150 சேனையாளரும் தங்கள் அர்ப்பணத்தைப் புதுப்பித்து திருப்பலியில் கலந்து கொண்டார்கள்,

### யாழ். ஆயர் - திருத்தந்தைக்கு விண்ணப்பம்

## யாழ்ப்பாண வேதசாட்சிகளை துதியர் எனப் பிரகடனப்படுத்துக

1689—1690 இல் வேதசாட்சிகளாக யாழ்ப்பாணத்தில் தங்கள் உயிரை, மற்றும் அறுவருடன், அர்ப்பணித்தவர்களாகிய டொம் பேதுரு, மனுவல் டி சில்வா ஆகிய இருவருக்கும் முத்திப்பேறு பட்டம் அளிக்குமாறு, யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஜனவரி 13, 1993 இல் வத்திக்கானிலுள்ள புனிதர் பட்டத்துக்கான பேராயத்துக்கு விண்ணப்பித்ததை நினைவூட்டி, எதிர்வரும் ஜனவரி, 1995 இல் யோசேவாஸ் அடிகளார் முத்திப்பேறு பெற்ற நிலைக்கு உயர்த்த பரிசுத்த தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் இலங்கைக்கு வரும் பொழுது, யாழ்ப்பாண வேத சாட்சிகளாசிய இவ் இருவர்களும் முத்திப்பேறு பெற்றவர்கள் என்று பிரகடனப்படுத்துமாறு யாழ் ஆயர் திருத்தந்தைக்கு விண்ணப்பித்துள்ளார்,

1993 இல் யாழ் ஆயர் விண்ணப்பித்ததையடுத்து, வத்திக்கான் பேராயம் 1993, மே 18இல் அனுப்பிய கடிதத்தில் (Prot. N. 1843, 1/92) இறையடியார்கள் டொம் பேதுரு, மனுவல் டி சில்வா இருவரும் புனித நிலைக்கு உயர்த்தப்பெறுவதற்கு, திருச்சபைச் சட்டத்துக்கு ஏற்ப

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## திருமறைக் கலாமன்றத்தின் திரு-இசை நிகழ்ச்சி

தூய ஆவியின் விழாவைச் சிறப்பித்து, திருமறைக் கலாமன்றம்'மூவொரு இறைவனை வாழ்த்துவோம்' எனும்பத்தி - இசை நிகழ்ச்சி ஒன்றை யாழ் புனித மரியன்னை பேராலய திறந்த வெளியரங்கில் கடந்த ஞாயிறு—22-05-94 மாலை நடாத்தியது. இந் நிகழ்ச்சி யாழ். மறைக்கோட்ட பங்குகளின் ஒன்றிணைந்த முயற்சியாக, திருமறைக்கலா மன்றத்தின் இயக்குனர் அருள்தந்தை நீ. மரியசேவியர் அடிகளால் நெறிப்படுத்தப்பட்டது.

ஆதிக் கிறிஸ்தவர் வாழ்வு முறை, இன்றைய கிறிஸ்துவ சமூகங்கள், நிறை ஆவி பெற்றோர் வாழ்வு என்பவற்றைக் காட்சிப்படுத்தி,மெல்லிசையின் பின்னணியில் மக்களின் சிந்தனைக்கும் ரசனைக்கும் வழி வகுத்தனர் கலைஞர்கள்,

இசைத்தென்றல் M. யேசுதாசன் அவர்களின் தலைமையில், திரு.N.M. பாலசந்திரன், செல்வி S. கயல்விழி பாடல்களை பக்கவாத்தியக் குழுவினரின் சாமர்த்தியத்துடன் பக்திப் பரவசத்துடன் பாட, மக்களுக்குத் துணையாக அருள் திரு லம்பேட் தலைமையில் ஓர் பாடகர் குழாம் இயங்கியது.

திரு இசை நிகழ்ச்சிகளிடையே ஆசிரியர் ஸ்ரனிஸ்லாஸ், அருள்தந்தை P.இருதயதாஸ் அருளுரைகள் வழங்கினார்கள். இறுதியில் ஊர்காவற்றுறை திரு. அன்ரன்மக்களை செபத்தில் ஈடுபடுத்தி மாலை நிகழ்வை நிறைவு செய்தார்.

## திருமறைக் கலாமன்றம் நடாத்திய தமிழ் விழா

கலை வழி மூலம் தமிழ்த் தொண்டு செய்யும் அமைப்பான திருமறைக்கலா மன்றம் இவ்வாண்டு, மே 23, 24, 25 ஆகிய மூன்று நாட்களில் அதன் இயக்குனர் நீ. மரிய சேவியர் அடிகளார் கூறியது போல, "முத்தமிழ் விழா வெடுத்து, மூத்த தமிழ் அறிஞர்களை வரவழைத்து, முதிர்ந்து வரும் ஆய்வாளருக்கும் முன் உரிமை கொடுத்து கருத்தரங்குகளும், கலை நிகழ்ச்சிகளும் நடாத்தித் தமிழ் தாயை" வணங்கியது.

தமிழ் விழாக் கருத்தரங்குகள் காலையில் யாழ் நாவலர் மண்டபத்திலும், மாலையில் மன்ற அரங்கிலும் நடைபெற்றன. மூன்று நாட்களும் முறையே இயற்றமிழ் இசைத்தமிழ், நாடகத்தமிழ் பற்றிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

முதல் நாள் மாலை நிகழ்வில் சிறப்பு நிகழ்ச்சியாக மன்ற ஆஸ்தானக் கவிஞர் "யாழ் ஜெயம்" அவர்கள் கௌரவிக்கப்பட்டார். அருள்திரு S. J. இம்மனுவேல் அடிகளின் தலை

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## திருவிழிப்பு

தூய ஆவியானவரின் விழாவையொட்டி விழாவுக்கு முதல் நாளான சனிக்கிழமை இரவு யாழ் மறைமாவட்டத்தில் பல்வேறு பங்குகளில் திருவிழிப்பு வழிபாடுகள் இடம் பெற்றன. யாழ் பிரதான வீதியிலுள்ள யாழ் மறைக் கல்வி நடுநிலையத்தில் நடைபெற்ற வழிபாட்டில் 600 க்கு மேற்பட்ட பக்தர்கள் ஒன்று கூடி இரவு 8 மணி தொடக்கம் மறுநாள் அதிகாலை 5 மணி மட்டும் பக்தியார்வத்துடனும், விசுவாசப் பற்றுதலுடனும் இதய சுத்தியுள்ள உணர்வோடும் செபிப்பதிலும், பாட்டுகள் மூலம் இறைவனைப் போற்றுவதிலும், மறைஉரைகள் மூலம் சிந்தனையைத் தூண்டுவதிலும், எல்லோரும் ஒருமனப்பட்டு மிகவும் விமரிசையாக அருள்தந்தை P. இருதயதாஸ் அடிகளாரின் வழிகாட்டுதலில் தூயஆவியானவரின் வருகைக்கு தங்களை ஆயத்தம் செய்தார்கள். அதிகாலையில் திருப்பலியுடன் இச்செபவழிபாடு நிறைவுற்றது. யாழ் நகரில் புனித யாகப்பர் ஆலயத்திலும், அரியாலைப் பங்கிலும் திருவிழிப்பு வழிபாடுகள் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## வத்திக்கானுக்கு

அண்மையில் ஏற்பட்ட கால் முறிவின் நிமித்தம் ரோம் ஜெமெல்லி மருத்துவ மனையில் மூன்று வாரங்களாக சிகிச்சை பெற்று வரும் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர், இன்னும் 3—4 நாட்களில் (இவ்வாரத்தில்) மருத்துவ மனையிலிருந்து வெளியேறுவார் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்கருத்து

# நிதானத்துடன் செயல்படுவோம்

யாழ் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாடு பல எதிர்பார்ப்புகள் மத்தியில் முடிவடைந்து இரு மாதங்களாகிவிட்டன. 'புதுப்பித்துப் பகிரும் திருச் சபையாக' என்னும் நோக்கோடு நடைபெற்ற இம் மாநாட்டின் முடிவு தலத்திருச்சபையில் மறுமலர்ச்சிக் காலத்தின் தொடக்கம் என எதிர்பார்க்கப்படுகின் றது. இம் மறுமலர்ச்சியின் தோற்றமாக மாற்றங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன — எதிர்ப்புக்கள் அல்ல.

இவ் எதிர்பார்ப்புகளெல்லாம் இம்மாநாட்டில் பரிமாறப்பட்ட பல்வேறு தரப்பட்ட கருத்துக்களி லிருந்து உதித்தன. இக்கருத்துக்களில் சில ஆழமாக அலசி ஆராய்ந்து, அதன் பயனாக தீர்க்கமான முடிவு கள் எடுக்கப்படவில்லையென்பதையும் யாவரும் அறிவர். நடைபெற்ற நிகழ்வுகளினூடாக, அதில் பெற்ற இறை அனுபவத்தின் வழியாக முன்வைக்கப் பட்ட கருத்துக் கொத்துக்களில் எவற்றை ஊக்குவிப் பது, எவற்றைத் தவிர்ப்பது என்று இனம்கண்டு கொள்வதில்தான் நம் விசுவாச வளர்ச்சி அமைத் திருக்கிறது.

மேலும், மறுமலர்ச்சி என்பது மாற்றங்களில்தான் முற்று முழுதாக அடங்கியுள்ளது என்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. எனினும் சிலவற்றில் மாற்றங்கள் அவசியமென்பதையும் மறுக்க முடியாது. எதற்கும் வெளிமாற்றத்தை அமுல் செய்வதற்கு முன் மிகவும் அவசியமானதும் இன்றியமையாததும் உளமாற்றமே!

பல ஆண்டுகளாக உறைந்திருந்த கொள்கைகள், நடைமுறைகள், காலத்தின் கோலத்திற்கேற்ப, காலத் தின் தேவைகளைக் கருதி மாற்றப்படவேண்டுமாயின், மக்களின் மனம் அம்மாற்றங்களை சீரணிக்கப் பக்கு வப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறே ஒவ்வொருவரி னதும் தனிப்பட்ட வாழ்வில் மனமாற்றம் முதலில் உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு நேர்மையான உள்ளத்தையும் எண்ணத்தையும் வளரச் செய்பவர் களே திருமறை வாழ்வின் உண்மையான மறுமலர்ச்சிக் குப் பொறுப்புள்ள ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடலாம்.

எதுவித மறுமலர்ச்சி முயற்சியும் ஒருதலைப்பட்ட எழுச்சியாக இருக்கலாகாது. அவ்வாறாயின் அது மிகவும் குழப்பமான நிலையைத்தான் உருவாக்கும். மேலிருந்து அடித்தளத்திற்கு எதுவும் திணிக்கப்பட் டால் பெரும் திண்டாட்டமாகத்தான் இருக்கும்.அறிவு பூர்வமாகச் சிந்திக்கும் எவனும் அவ் அணுகு முறையை ஏற்றுக்கொள்ளவே மாட்டான். கருத்துக் துக்களை இறைமக்களோடு பகிர்ந்து கொள்ளும் தொடர்பு நுணுக்கங்களில் தலைவர்கள் என்றும் விழிப்பாயிருக்கவேண்டும். சிக்கலான கருத்துக்களை, அவை எவ்வித முற்போக்கானவையாயிருந்தாலும், பொறுப்புள்ளவர்கள் மக்கள்முன் தெளிவுபடுத்தி ஒருமைப்பாட்டை வளர்ப்பார்களேயானால், விரும் பத்தகாத விவாதங்களும், குதர்க்கமான குத்தல்களும், குழப்பம் உருவாக்கும் சூழ்நிலைகளும் எழுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். எதிலும் படிப்படியாக காலை எடுத்து வைத்தல் தவறி விழுவதை தவிர்ப்ப தற்கு சிறந்த நடைமுறையாகும்.

எதிலும் விழிப்புணர்வு அவசியம். மாநாட்டில் முன்வைக்கப்பட்ட ஒரு சில முன்னுரிமைப் பணிகள், குறிப்பாக இறைபணியில் பண்பாட்டியற்படுத்தும் பாணி மிகவும் பிரச்சினைப் பொருளாகி விட்டதென் பதை மனதில் கொள்ளாது, மக்கள் மனத்தை பக்கு வப் படுத்துமுன் மாநாட்டு எல்லா அம்சங்களையும் செயல்படுத்த முனைவது, இன்னும் மேலாக செயல் படுத்திவிட்டதாக தம்பட்டம் அடிப்பது, மறுமலர்ச் சியை அல்ல, மறைப்புரட்சியையே உண்டுபண்ணும்!

# மீட்புச் செய்தியை அறிவிப்போம்

## 3. இயேசு கிறிஸ்துவின் பிறப்பு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கிறிஸ்துவின் வாழ்க்கை யைப் பற்றி நான்கு நற்செய்தி ஏடுகள் விளக்கம் தருகின்றன. கிறிஸ்துவின் பிறப்பைப்பற்றி லூக்காஸ் விபரமாக எழுதி யுள்ளார்.

பாவிகளான மானிடரை மீட்கப் போகும் மீட்பருக்கு தாயாக கன்னிமரியாளை இறைவன் தேர்ந்துகொண் டார். எனவே அவள் உற்ப வித்த நேரத்தில் இருந்தே அவளைப் பாவமாசணுகாது பாதுகாத்தார்.

யேசுவின் பிறப்புச் செய்தி யை மரியாளிடம் தெரிவித்து அவளது ஒத்துழைப்பை அடைய இறைவன் தம் தூதரை அவளிடம் அனுப்பி னார். தூதர் மரியாள் வீட்டி னுள் நுழைந்ததும் "அருள் நிறைந்தவளே வாழ்க, கத்தர் உம்முடனே" என்று வாழ்த்தி னார்.

மரியாள் கலங்கினாள். தூதன் அவளை நோக்கி "மரியே அஞ்சாதீர், கடவுளின் அருளை அடைந்துள்ளீர், இதோ உம் வயிற்றில் கருத் தரித்து ஒரு மகனைப்பெறுவீர், அவருக்கு யேசு என்னும் பெய ரிடுவீர்"

(லூக். 1: 30–31)

இதைக் கேட்டதும் சூசைக்கு "மண ஒப்பந்தமாயிருந்த மரி யாளின்" கலக்கம் அதிக மாயிற்று. அவள் தூதனைப் பார்த்து 'இது எங்ஙனம் ஆகும் நானோ கணவனை அறியேன்' என்றாள்

அதற்குத் தூதன் "பரிசுத்த ஆவியானவர் உம்மேல் நிழலிடு வார்.பிறக்கும் குழந்தை இறை மகன் எனப்படுவார், உம் உற வினரான எலிசபேத்தும் முதிர்ந்தவயதில் ஒரு மகனைக் கருத்தரித் திருக்கின்றாள். மலடி எனப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம்.கடவுளால் ஆகாதது ஒன்றும் இல்லை" என்றார்.

உடனே மரியாள் "இதோ ஆண்டவருடைய அடிமை யானவள்! உமது வார்த்தை யின் படியே எனக்கு ஆகட்டும்" என்றாள்,

அந்நேரமே இறைமகன் கருவானார்; அவளின் வயிற் றில் மனிதாவதாரம் பூண்டார்

"உருவிலான் உருவாகி
உலகிலொரு மகனுதிப்பக்
கருவிலாக் கருத்தாங்கி
கன்னித்தாய் ஆயினையே"

என்று திருக்காவலூர்க் கலம்பகத்தில் வீரமாமுனிவர் இந் நிகழ்ச்சியை வர்ணிக் கின்றார்.

**சூசையின் கலக்கம்:**

மலடியான தனது பந்து வான எலிசபேத் ஆறுமாதக் கர்ப்பிணி என்று தூதர் மூலம் அறிந்த மரியாள் அவளுக்கு உதவும் பொருட்டு அவள் அகம் சென்றாள். மூன்று மாதங்களுக்குப்பின் தன்னில் லிடம் திரும்பினவளின் உடல் நிலை மாற்றத்தைக் கண்டு சூசை கலக்கம் கொண்டு அவளை இரகசியமாக விட்டுப் பிரிவதற்கு எத்தனம் செய்யும் போது; வானதூதர் அவருக்கு கனவில் தோன்றி உண்மையை விளக்கி, பிறக்கப்போகும் குழந்தைக்கு "இயேசு" எனும் நாமம் சூட்டும்படியும், இவரே தம்மக்களை அவர்களுடைய பாவங்களில் இருந்து மீட்பார் என்றும் அறிவித்தார்.

கலக்கம் தெளிந்த சூசை மரியாளைத் தம் மனைவியாக ஏற்றுக்கொண்டார். அவள் வயிற்றில் வளர்ந்த குழந்தைக் கும் பாதுகாவலரானார்.

**கிறிஸ்துவின் பிறப்பு**

பேரசர் செசார் அகுஸ்துஸ் ஆணைப்படி சூசையும் மரியா ளும் தம் பேர்களை பதிவு செய்வதற்காக பெத்லகேம் செல்ல வேண்டியிருந்தது. அரசன் தன் பிரசைகளின் கணக்கை எடுக்க விரும்பி னான். எனவே தாவீது குலத் தவராகிய சூசை அங்கு சென் றார். அங்கு மரியாளுக்குப் பேறு காலமாயிற்று. சத்திரம் சாவடி எங்கும் ஒரே சனக் கும்பலாயிருந்தது. வீடுகளிலும் யாரும் அவர்களை ஏற்க வில்லை. எனவே ஒரு மாட்டுத் தொழுவத்திலே, மார்கழி மாதம் 25ஆந் திகதி நள்ளிரவு நேரம் எம்பெருமான் அவதரித் தார். வானவர் கீதங்கள் பாடி வாழ்த்துப்பா இசைத்தனர். அமைதியற்ற மனத்தினர்க்கு மன அமைதியைக் கொடுக்க மனுமகன் அவதரித்தார்.

(வளரும்)

## ★ அன்னை திரேசாவின் இதயக்குரல்
## 'இன்றைய கொடிய நோய்'

இன்றைய மிகக் கொடிய நோய் சமுகத்தால் ஒதுக்கப்பட்டு நம்பிக்கை இழந்து நிற்கும் மனநோய் தான்.

பிரார்த்தனைதான் எங்கள் வாழ்க்கை. தெய்வ நம்பிக்கையையும் அன்பையும் நடைமுறையில் வாழ்ந்து காட்ட விரும்புகிறோம். ஒதுக்கப்பட்டவர்களையும், ஒடுக்கப்பட்டவர்களையும் நடமாடும் தெய்வங்களாக பூஜிப்பதுதான் ஒரே தாரக மந்திரம்.

# கல்வியுலகிலே நற்பணியாற்றும் டிலாசால் சகோதரர்கள்

(திருநாள் 15—05—94)

**கடந்த ஒன்றேகால் நூற்றாண்டு காலப்பகுதியில் டிலாசால் சகோதரர்கள் இந் நாட்டில் பல வெற்றி–தோல்விகள், மேடு பள்ளங்களைக் கண்டு கடந்து விடா முயற்சியுடன் பணயாற்றி வருகின்றனர். கொழும்பில் மட்டுமன்றி நீர்கொழும்பு, பண்டாரவளை, சிலாபம், கந்தானை, வத்தளை, மன்னார் ஆகிய இடங்களிலும் அவர்களது பணித்தளங்கள் பரவின.**

அறியாமை என்ற இருளை மனித உள்ளங்களிலே அகற்ற உலகிலே 88 நாடுகளில் வலம் வருகின்ற சபைதான் புனித டிலாசால் சகோதர சபை. தெரு ஓரங்களிலும், நடை பாதைகளிலும், எளிய குடிசை களிலும் வாழ்ந்து வாழ்க்கை யோடு ஒவ்வொரு நாளும் போராடும் ஒதுக்கப்பட்ட எண்ணற்ற இளம் இதயங் களிலே கல்விச்செல்வத்தினை அளித்து அவர்களின் எதிர் காலத்தை ஒளிமயமாக்க 1680ஆம் ஆண்டு 'புனித டிலாசால் என்பவரால் பிரான்ஸ்நாட்டில் ஆரம்பிக்கப் பட்ட சபைதான் இது. அவ ரது அடிச்சுவடினைப் பின் பற்றி "ஏழை எளிய நெஞ்சங் களில் கல்வியைப் புகட்டுவதன் மூலம் கடவுளைக் கண்டு மகி ழலாம்" என்ற உயரிய நோக் கினை மனதில் ஏந்தி கடந்த 314 ஆண்டுகளாக உலகில் "ஒளிரும் விசுவாசமும் மிளிரும் ஆர்வமும்" கொண்ட எண் ணற்ற தியாக உள்ளங்கள் தங்களுடைய வாழ்வினை இதில் அர்ப்பணித்து நிறை வினைக் கண்டு மகிழ்கின்ற னர் தங்களுடைய சொல்லா லும், செயலாலும் இறை வனுக்கு ஏற்ற வாழ்வாலும் தங்கள் பணியை சிறப்புடன் செய்து வருகின்றனர்.

புனித ஜோண் பப்ரிஸ்ற் டிலாசால் உலகிலே வழிதெரி யாத மக்களுக்கு நற்கல்வி தனைப் புகட்டவேண்டும், ஆசிரியர் நல் வாழ்வுதனை வளம்படுத்த வேண்டும், என்ற நோக்கத்தை தம் வாழ்வின் கலங்கரை விளக்காய்க் கொண்டு கல்வியுலகிலே அவர் நற்பணியாற்றினதையும் அவ ரது அயரா உழைப்பினையும் பாராட்டி கத்தோலிக்க திருச் சபை அவரை அகில உலக ஆசிரியர்களின் பாதுகாவல ராய் நியமித்து இன்று 44 ஆண்டுகள் நடந்துவிட்டன.

1866ஆம் ஆண்டு அதி மேற் றிராணியாராக இருந்த அதி வண. கில்லேரியன் கில்லாணி (O. S. B) அவர்களின் அழைப் பின் பேரில் அதே ஆண்டு மார்கழிமாதம் பிரான்சைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் இலங்கை மண்ணிலே டிலாசா லின் வித்தை விதைத்தனர். அவர்கள் இங்கு வந்து புனித ஆசீர்வாதப்பர் சபைக் குருக் களால் நடாத்தப்பட்ட புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியை (கொட்டாஞ்சேனை) 1867-ம் ஆண்டு தை மாதம் பொறுப் பேற்றனர். அன்று தொடங்கி இன்று வரை அவர்கள் இலங்கை மண்ணிலே பணி யாற்றி 128 ஆண்டுகளைக் கடந்து வெற்றி நடை போடு கின்றார்கள்.

அருட்சகோதரர்
R. யோசப் ஜெயகாந்தன்.
114, டிலாசால் இல்லம்,
யாழ் பிரதான வீதி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை
இரக்கத்தினாலும்
திரு ஆட்சிப் பீடத்தின்
பணிப்பினாலும்

EVANGELIZARE DIVITIAS CHRISTI

யாழ். ஆயரான

# இ. தோமஸ் சவுந்தரநாயகம்

எமது மறைவட்டத்தின் குருக்கள், துறவியர், பொதுநிலையினரான இறைமக்களுக்கு தூய ஆவியானவரின் விழாவன்று விடுக்கும்

# சுற்று மடல்

கிறிஸ்து யேசுவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

## யாழ். மேய்ப்புப் பணி மாநாடு

பரிசுத்த ஆவி அளிக்கும் பொங்கும் புதுப்புனல் வழியாக மேய்ப்புப் பணி மாநாட்டை நடாத்தினோம். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வல்லமையை, அவரது வழி காட்டுதலை, பலம் மிக்க அவரது ஒளிவீச்சில் கண்டு உணர்ந்து அனுபவித்தோம். மேய்ப்புப்பணி மாநாடு முடிவுற்று இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. இதன் செயற்பாடுகள் என்ன என்ற கேள்வி பலர் உள்ளங்களிலும் எழுகின்றதை யாம் அறிவோம். இம் மாநாட்டில் பிரதிநிதிகளாக கலந்து கொண்ட யாவரும் தாம் ஒரு புதிய அனுபவத்தைப் பெற்றதாக, ஒரு புதிய தரிசன நோக்கை கண்டு உணர்ந்தவர்களாக, எம்மை புதுப்பித்து பகிரும் திருச்சபையாக, புதுக்களம் அமைத்து மறை பணி ஆற்ற ஓர் அழைப்பைப் பெற்றுக்கொண்டோம். எனவே, இவ் அனுபவங்களை பங்கு திருச்சபைகளிலும், ஆலய திருச்சபைகளிலும், அனைத்து மக்களுடன் பகிர்ந்து கொள்ள மகாநாட்டில் பங்குபற்றிய அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். பரிசுத்த ஆவியின் ஆற்றலால், அவரது அரும் செயலால் மாநாட்டின் முடிவில் பெற்றுக்கொண்ட தூண்டுதல்கள் பல. இவற்றை சிந்திக்கும் வேளையில், முதற்கட்டமாக, நாம் இறைவார்த்தையில் உதித்த ஓர் இறைமக்கள் சமூகம் என்ற உண்மையை ஆழப்படுத்த முயல்கிறோம்.

## இறைவார்த்தையும் இறைமக்களும்

நம்மை புதுப்பித்து, புதிய தரிசன நோக்கைப் பெறுவதற்கு எமது மறையின் ஊற்றாகிய இறை வார்த்தைக்கும், அதன் முழுமையான கிறிஸ்துவிற்கும் செல்ல வேண்டும். இறைவன் தன் அன்பினால், தம் மக்களுக்குத் தரும் இறை வெளிப்பாட்டை சுமந்து வருவதே மறை நூலும், திருச்சபையின் உயிருள்ள பாரம்பரியமும் ஆகும். எம்முடைய விசுவாசத்திற்கும், வழிபாட்டிற்கும், வாழ்விற்கும் அடிப்படையானது இறைவார்த்தை. நாம் இறை மக்களாக உருவாகுவதற்கும் அடிப்படை இறைவார்த்தையே ஆகும்.

திருச்சபைக்கு ஆதரவாகவும் சக்தியாகவும், அவர் தம் மக்கள் விசுவாசத்தின் வலிமையாகவும், ஆன்மாவிற்கு உணவாகவும், ஞானவாழ்விற்கு தூயநிலையான ஓர் ஊற்றாகவும் திகழ்வது இறைவார்த்தையாகும். திருச்சபையின் உண்மையான மறுமலர்ச்சி இறைவார்த்தையில் இருந்தே தோன்றுவதாகும். இறைவார்த்தைப் பணிக்கு தலத்திருச்சபை தகுந்த முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். ஒப்புயர்வற்ற இறைவனின் முழு வெளிப்பாடும் கிறிஸ்து ஆண்டவரில் நிறைவு பெறுகின்றது. திருமறைநூலை அறியாமல் இருப்பது கிறிஸ்துவையே அறியாமல் இருப்பதாகும். எமது தல திருச்சபை இயேசுவையும், அவர் வார்த்தையையும் ஊற்றாகக் கொண்ட ஓர் ஆவியின் சபை என உணர்கின்றோம். வரலாற்றிலே திருச்சபை தன்னை புதுப்பிக்கும் தேவையை உணர்ந்தபோதெல்லாம் மீளவும் இறைவெளிப்பாட்டின் ஊற்றாகிய திருமறை நூலையே நாடிச் சென்றுள்ளது. எனவேதான், நடந்து முடிந்த மேய்ப்புப்பணி மாநாட்டிலும், தன்னைப் புதுப்பித்து பகிரும் திருச்சபையாக மாற இறைவார்த்தைக்கு, திருமறை நூலுக்கு முக்கியத்துவம் கொடுபட வேண்டும் என்ற குரல் மீண்டும் மீண்டும் ஒலித்தது.

## இன்றைய யதார்த்த நிலை

எமது தல திருச்சபையில், இறைவார்த்தைக்கும், திருமறைநூலுக்கும் கொடுக்கப்படும் முக்கியத்துவம் என்ன? ஏனைய வழிபாடுகளுக்கும், பணிகளுக்கும், பக்தி முயற்சிகளுக்கும் கொடுக்கப்படும் கவனம் இறைவார்த்தைப் பணிக்கு கொடுக்கப்படவில்லை. திருப்பலியிலும், தேவதிரவிய அனுமான கொண்டாட்டத்திலும், இறைவார்த்தை இடம்பெற்றாலும், அதன் சிறப்பை மக்கள் உணர்ந்து பயன் அடையவில்லை. அதிகப்பற்றான வீடுகளில், திருமறைநூல் இல்லை. அதை வைத்திருப்பவர் முதலாய் வாசிப்பதிலே, படிப்பதிலே, செபிப்பதிலே, வாழ்வில் அவைகாட்டும் விழுமியங்களை பின்பற்றுவதிலே ஆர்வம் காட்டுவதில்லை. திருமறைநூலை குழுமாக படித்து, பகிர்ந்து, செபிக்கும் பழக்கம் ஏற்படவில்லை. வேத நூல்கள் அனைவருக்கும் இலகுவாகக் கிடைக்க கூடிய வசதிகளும் இல்லை. திருமறை நூலைப்பற்றிய கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள் போதியளவு நடாத்தப்பட்டு, மக்கள் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடிய வழியில் செயற்பாடுகள் குறைவாகவே உள்ளன.

## இறைவார்த்தைப் பணியை முன்னெடுத்து செல்ல செய்யவேண்டியவை

(1) மறை மாவட்டத்தில் இறைவார்த்தைப் பணிக்கு முன்னுரிமை வழங்கி, மேய்ப்புப்பணி மாநாட்டின் முடிவாக வரும் உச்சப்பணியாக மதித்து செயற்படுதல். இவ்வாறே பங்குகளிலும், மேய்ப்புப்பணிகளை நிரைப்படுத்தும் பொழுது இறைவார்த்தைப் பணிக்கு முன்னுரிமை கொடுத்தல்.

(2) ஒவ்வொரு ஆலய திருச்சபையிலும் வேதாகமக் குழுக்களை அமைத்து, வாரம் தோறும் இக் குழுக்கள், பங்குக் குரவரின் அல்லது, அவரது பிரதிநிதியின் தலைமையின் ஒன்றுகூடி, வேதாகம பகிர்வுகளை நடாத்தி இறை அனுபவத்தை பெற்றுக்கொள்ள ஆவன செய்தல்.

(3) ஆலய திருச்சபைகள் தோறும் வேதாகம கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புக்கள் நடாத்தல்.

(4) ''வீட்டிற்கு ஒரு விவிலியம்'' என்ற விருதுவாக்கிற்கு ஏற்ப திருமறை நூல் கிடைக்கக்கூடியதாக, மக்களின் உதவியுடனே, மானிய முறையில் வேதாகமத்தை வழங்க ஆவன செய்தல்.

(5) கிறிஸ்தவ குடும்பங்களில், திருமறை நூல் அறிவைப் பெருக்க, குடும்ப செபத்தின் போதும், நன்மை தின்மையின் போதும், வேதாகம வாசிப்பும் பகிர்தலும் ஊக்குவிக்கப்படுதல்.

மேற்கூறிய செயற்பாடுகள், எமது பங்குகளில் விரைவாக செயற்படுத்தப்பட்டு, இறைவார்த்தைப் பணி ஊக்குவிக்கப்பட, திரு மறை நூல் அறிவு பெருக, பங்கு தந்தையர்களையும் மேய்ப்புப் பணி மாநாட்டில் கலந்து கொண்ட எல்லா பிரதிநிதிகளையும் மற்றும் சகல கிறிஸ்தவ விசுவாசிகளையும், திட்டங்களை தீட்டி துரிதமாக உழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். பரிசுத்த ஆவியின் வல்லமையால், நம்மத்தியில் உருவான இச் சிந்தனைகளும், எமது ஆவல்களும் சிறப்புடன் செயற்படுத்த ஆவியின் வல்லமையையும், அவரது வழிநடத்தலையும் நம்பிக்கையுடன் நாடுவோம்.

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்
17-05-1994

ஆண்டவரில் உங்கள்மேல் பற்றுள்ள
+ தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ். ஆயர்

குறிப்பு: இச் சுற்றுமடல் எதிர்வரும் ஞாயிறு திருப்பலியின்போது எமது மறைமாவட்டத்தின் எல்லா ஆலயங்களிலும் வாசித்து விளக்குதல் வேண்டும்.

# மொழி விற்பன்னராம் தும்பளை தாவீது அடிகள்

தும்பளை கலாநிதி தாவீது அடிகளாரின் மறைவின் 13வது ஆண்டின் நிறைவினை ஒட்டிப் பிரசுரிக்கும் கட்டுரை. நினைவு நாள் யூன் 2 ஆம் திகதி.

ஆக்கம்: ஏ. அந்தோனிமுத்து
(B. A. Hons. Dip. in Ed.)
தும்பளை.



தமிழீழத்தைத் தாயகமாகக் கொண்டு வாழ்ந்து தனது ஆழ்ந்த, அகன்ற மொழி ஆய்வின் மூலம் தமிழின் சிறப்பை தமிழன் பெருமையை உலகறிய வழிவகுத்த செம்மலே பன்மொழி விற்பன்னரும் ஆய்வாளருமான தும்பளை கலாநிதி தாவீது அடிகள். இவர் மறைந்து யூன் 2-ந் திகதியன்று 13 ஆண்டுகள் நிறைவுறுகின்றன.

1907-ம் ஆண்டு யூன் 28-ந் திகதி பருத்தித்துறை நகரின் அருகாமையிலுள்ள தும்பளையில் பிறந்த இவர் தன் ஆரம்பக் கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியில் தொடங்கி லண்டன் 'மற்றிக்குலேஷன்' வரை படித்துத் தேர்ச்சி பெற்றார். பின் குருமடத்தில் சேர்ந்து கற்று 1931-ம் ஆண்டில் கத்தோலிக்க குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்த இவர் 'லண்டன் பல்கலைக் கழக இளங் கலைமாணி (வரலாறு-சிறப்பு)'ப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். 1940 களில் நல்லூர் சுவாமி ஞானப் பிரகாசருடன் தொடர்பு ஏற்பட்டதினால் சமஸ்கிருதம் போன்ற கீழைத்தேச மொழிகளைக் கற்கத்தொடங்கினார். இதன் விளைவாக லண்டன் பல்கலைக் கழக முதுகலை மாணிப் பட்டம் (சமஸ்கிருதம்) கலாநிதிப் பட்டம் (தமிழ்) ஆகிய உயர் பட்டங்களைப் பெற்ற இவர் 30க்கு மேற்பட்ட மொழிகளில் பாண்டித்தியம் பெற்று விளங்கினார்.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் மறைவின் பின் அவர் தொடக்கிவைத்த மொழி ஆய்வுப் பணியினைத் தொடர்ந்தார். முக்கியமாக தமிழ்-சிங்கள—சமஸ்கிருத—சொற்பிறப்பு ஒப்பியில் இலக்கண அகராதி (2-ம் பாகம்), சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ்—சிங்கள இலக்கண அகராதி (3-ம், 4-ம் பாகங்கள்) என்ற ஆய்வுத் தொகுப்புக்களை வெளியிட்டார்.

ஸ்ரீலங்காவில் 1950 களில் ஏற்பட்ட இன, மொழிப் பிரச்சினைகளில் விளைவாக இனத் துவேஷம், இனமோதல்கள், இனக் கலவரங்கள் தலைதூக்கி இந்நாட்டினை உருக்குலைந்ததை உணர்ந்த தாவீது அடிகள் இனங்களினதும், மொழிகளினதும் தோற்றம், வளர்ச்சி, மாற்றம் ஆகியன பற்றித் தெளிவான விளக்கங்களை ''நாமனைவரும் இனத்தவரே'', (''We stand for'') போன்ற நூல்கள் மூலம் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தாவீது அடிகள் மொழி ஆய்வினை சகல இனமக்களினதும் ஒற்றுமைக்கும் ஐக்கியத்துக்கும் நல்லுறவுக்கும் பயன்பட வேண்டுமென்றே தம் பணியினை மேற்கொண்டு ஓர் இலட்சிய சமுதாயத்தை உருவாக்க முனைந்தார். இதுவே அளப்பரிய தொண்டு என்றால் மிகையாகாது.

## உங்கள் சிந்தனைக்கு

1. ஆர்வமில்லா அறிவு அறியாமையின் சகோதரி
— ஜோன் டேவிஸ்

2. நோயற்ற வல்லுடல் படைத்தவனிடம் கோபம், பொறாமை போன்றவைகள் எழுவதில்லை. பலவீனந்தான் சீற்றத்துக்குக் காரணம்.
—ரஸ்ஸல்

3. உங்கள் மனைவி எப்படி கற்புள்ளவளாயும், கபடற்றவளாயும் இருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அவ்வாறே நீங்களும் இருக்க வேண்டுமென்று அவள் விரும்புவாள். இதை மறவாதீர்கள்.
—பேடன் பவல்

4. பேராசை கொண்டவர்கள் என்றும் திருப்தியடைவதில்லை.
—விவேக சிந்தாமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்திமா அன்னையின் வேண்டுகோள்

இறை அன்னையின் காட்சிகள் பல. தோன்றிய நாடுகள், தலங்கள் பல. ஆனால் அவள் அளித்த செய்திமட்டும் ஒன்று. அதுதான் மீட்பு.

பாத்திமா நகரில் மரியன்னை தந்த காட்சி ஒரு தற்கால நிகழ்ச்சி. லூசியா, ஜெசிந்தா, பிரான்சிஸ், ஆகிய சிறுவர் மூவருக்கு 1917 - மே 13 ஆம் நாள் கோவா தூ-ஈரியாவில் காட்சி கொடுத்தாள் அக்கோமகள்.

அக்டோபர் திங்களில் அவ்விடையச் சிறுவர்க்கு இறுதியாக தோன்றிய போது ஏறத்தாள 10 நிமிடங்கள் கதிரவனை விண்ணில் விந்தைக்குரிய வகையில் சுழல வைத்து, அப்பெரும் புதுமையின் மூலம் அங்கு குழுமியிருந்த ஆயிரமாயிரவரின் உள்ளங்களில் நம்பிக்கை தீபத்தை ஏற்றிவைத்த அன்னை விடுத்த வேண்டுகோள் ''தினமும் செபமாலை செபியுங்கள். பாவிகள் மனம் மாறி மீட்பின் பலனை அடையும் பொருட்டு தபம், தியாகம் நிறைந்த செயல்களில் ஈடுபடுங்கள்'' என்பதே.

அச்சமயம் ''நான் உம்மிடம் வேண்டும் வரங்கள் பல உள. நோயுற்றோருக்கு உடல் நலம், பாவிகளின் மனமாற்றம் சில'' என லூசியா கூறக் கேட்ட அன்னை, ''நீ கேட்ட வரங்களில் சிலவற்றை அளிப்பேன்– மற்றவற்றை அருளுமுன் பாவிகள் தம் வாழ்க்கை முறையை நல்வழிப்படுத்தித் தங்கள் பாவங்களுக்காக உளம்வருந்தி இறைவனின் மன்னிப்பைக் கோருவது அவசியம்'' என்று பதில் அளித்தாள்.

---

வாசகர் கடிதம்

### புதிய சிந்தனை உலகிற்கு ...

பாதுகாவலனில் திரு. N. சண்முகலிங்கன் எழுதும் ''மரபுகளும் மாற்றங்களும்'' புதியதொரு சமூகப்பரிமாண சிந்தனை உலகிற்கு எம்மை அறிமுகம் செய்வதாக அமைகிறது. இது தமிழ் கூறும் கத்தோலிக்க சமூகங்களுக்கு பண்பாட்டு மயமாக்கல் (Inculturisation), தற்சூழல் மயமாக்கல் (Contextualisation), சமூகமயமாக்கல் (Socialization) போன்ற எண்ணக் கருக்களை ஆழமாக விளங்கிக் கொள்ளவும் அதற்கேற்ப நம் திருச்சபையின் புதிய பரிமாண வளர்ச்சிகளுக்கு எம்மை இலகுபடுத்தவும் நல்ல அடித்தளங்களை உருவாக்கும் அத்திவாரமாக அமையும். அவரது இவ்வாக்கம் மேலும் இடைவிடாதுவளர மனமார வேண்டுகிறேன். நன்றி

ஞா. ல. ஞானதேவா

---

திருமறைக் கலா மன்றத்தின்

## 'பத்தே பத்து'

● ஒரு கண்ணோட்டம்

### ''இரண்டுக்குள் பத்து''

பத்துக் கட்டளைகள் பிறந்த வரலாற்றை அபிநயமாகவும் ஒவ்வொரு கட்டளையையும் விளக்கும் மெல்லிசைப் பாடல்களாகவும் அமைக்கப்பட்டு கடந்த 10-04-94 ல் திருமறைக் கலாமன்றத்தினரால் மேடையேற்றப்பட்ட 'பத்தே பத்து' என்ற இசை–உரை–நாடகம் ஒரு வித்தியாசமான தயாரிப்பு என்பதில் ஐயமில்லை.

ஒரு மெல்லிசை நிகழ்ச்சியாக இதைப் பார்க்கும்போது இந்த முயற்சி பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும். இசைத்தென்றல் யேசுதாஸின் ஆற்றல்கள் அப்பட்டமாக வெளிப்படுத்தப்பட்ட நிகழ்வாக இதனைக் கொள்ளலாம். இனிமையான குரல்களில் பாடல்களுக்கு அர்த்தம் கொடுத்துப் பாடிய பாடகர்களும் அநாயாசமாக பக்கவாத்தியம் இசைத்த கலைஞர்களும் வாழ்த்தப்பட வேண்டியவர்கள். இசையை இரசிப்பதற்காக என்றாலும் இறைவன் இன்னும் ஐந்து அல்லது பத்துக் கட்டளைகளை கொடுத்திருக்கக் கூடாதா என்று தோன்றியது. பாடர்களின் குரல்களோ அல்லது இசையமைப்போ சில பழைய சினிமாப் பாடல்களை நினைவூட்டியதைக் கூறாமலிருக்க முடியாது.

இஸ்ராயேல் மக்களின் வரலாற்றை சித்தரித்த அபிநயக் காட்சிகளுக்கும் பாடல் நிகழ்ச்சிக்கும் இடையே இடைவெளி ஏற்படாமல் ஒரு தொடர் நிகழ்வாக அமைந்திருந்தால் தொய்வு தோன்றியிருக்காது. மோயீசன் கோலைப் போட்டபோது அது பாம்பாக மாறாமல் இருந்தும் பாம்புதான் நிற்கிறது என்பதை தமது நடிப்பால் வெளிப்படுத்தியது நடிகர்களின் திறமைக்கு ஒரு உதாரணம். செங்கடலைக் கடக்கும் காட்சி பின்னணி இசையோடு கலந்து மிகவும் தத்ரூபமாக அமைந்து மெய்சிலிர்க்க வைத்தது. ஒரு நாடகம் அரங்கேறும் போது பின்னணி இசைப்பவர்களின் பணி எத்துணை கடினமானது என்பதை பின்னணி இசையமைப்பாளர்களை மேடையிலேயே வைத்து இசையமைக்கச் செய்து ரசிகர்களுக்கு உணர்த்தியது ஒரு சிறப்பம்சமாக இருந்தாலும் சில சந்தர்ப்பங்களில் ரசிகர்கள் காட்சிகளில் முழுமையாக ஒன்றிக்க இடையூறாக இருந்ததென்பதும் உண்மை.

பத்துக் கட்டளைகளை விளக்கும் பாடல்களின்போது

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

---

### குருசுமுத்தண்ணையின் கிசு கிசு - 82

அடைக்கலம்: நாங்க இருக்கிற இருப்பில எங்களால எப்பிடி அண்ணே உதவ முடியும். தினமும் நாங்க சுமக்கிற சுமையளைப் பார்த்தா யாருக்கண்ணே உதவ முடியும்?

குருசு: தம்பி, எல்லாரும் இதைத்தான் சொல்லிக் கொள்கினம். ஆனா மனசு வைச்சா சொல்லாமலே செய்யலாம். சிலுவைகளை சுமக்கிற சீவன்களைப் பாத்து சீமோன்களாகவாவது சிறிது தூரம் முயன்றால் சகோதரர்களின்ர சுமையும் குறையும், உங்கட உறவும் வளரும் எல்லோ தம்பி.

---

## ஆசா. யோசேவ் வாஸ் முனிவர் வாழ்வும் - பணியும்

வரலாற்றுப் பின்னணி

பகுதி I

(சென்ற இதழ் தொடர்ச்சி)

(10) 'மடுமாதா திருப்பதி' தோன்றியது எவ்வாறு?

ஒல்லாந்தர் செய்துவந்த கொடுமைகளைப் பொறுக்கமுடியாத பல கத்தோலிக்க மக்கள் தாங்கள் வாழ்ந்துவந்த இடங்களை விட்டுப் பெயர்ந்து, அமைதியும் பாதுகாப்பும் உள்ள இடங்களைத் தேடிச்சென்றனர். இவ்வாறு மாந்தையிலிருந்த சில கத்தோலிக்கர், தாங்கள் வணங்கிவந்த அற்புதங்களைச் செய்த மாதா சுருபத்தைத் தங்களோடு எடுத்துக்கொண்டு அடர்ந்த காடுகளால் சூழப்பட்டிருந்த இடமாகிய மடு என்னும் இடத்திற்குச் சென்று தங்கி தங்கள் சீவியத்தை எவ்வித தொந்தரவுமின்றி அனுசரித்து வந்தனர்.

(11) கண்டி இராச்சியத்தின் பல்வேறு இடங்களில் புகுந்து ஆங்காங்கே கத்தோலிக்கர்கள் குடியேறியதற்கான காரணங்கள் எவை?

1. ஒல்லாந்தரின் கொடுமைகளுக்கு தப்பித்துக்கொள்ளும் பொருட்டு.
2. அங்கு ஒல்லாந்தருக்கு எவ்வித ஆதிக்கமும் இல்லாதிருந்தமை.
3. கண்டிமன்னன் அவர்களை துன்புறுத்தாமல் விட்டதோடு அவர்களுக்கு பாதுகாப்பும் அளித்துவந்தான்.

(12) இவ்வாறு அவர்கள் குடியேறிய இடங்கள் எவை?

சீதாவக்கை, ரூவென்வெல, கொண்டெங்கமுவ, இரத்தினபுரி வாகக்கோட்டை, கல்கமுவ.

(13) 30 ஆண்டுகளுக்கு மேல் குருமாரின் உதவி இல்லாமற் போனமையால் ஏற்பட்ட விளைவுகள் எவை?

1. நல்ல கிறிஸ்தவ சீவியம் சீவிக்க முடியாத நிலையில் இருந்தார்கள்.
2. சிலருடைய விசுவாசம் தளர்ச்சியடையத் தொடங்கியது.
3. அந்தக்காலத்தில் பிறந்த பிள்ளைகள் தகுந்த ஞான அறிவைப் பெறாமலும், தேவதிரவிய அனுமானங்களின் தெய்வீக உதவியை அடையாமலும், பெயரளவில் மாத்திரம் கிறிஸ்தவர்களாக வளர்ந்து வந்தனர்.

பகுதி — II

(1) ஆசாரத்துக்குரிய யோசேவாஸ் முனிவரின் பிறப்பைப்பற்றிக் கூறுக.

1651 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 29 ஆம் திகதி கோவா பட்டணத்திற் பிராமணர் குலத்தில் பிறந்தார்.

(2) 1676 இல் அவர் குரு பதவிக்கு உயர்த்தப்பட்ட பின் எங்கெங்கு தொண்டாற்றினார்?

கோவாவில் 5 வருடங்கள் ஞானத்தொண்டாற்றிய பின், கன்னட இராட்சியத்தில் சுவிசேஷம் போதித்தார்.

(3) இலங்கைக் கத்தோலிக்க மக்களுக்கு உதவவேண்டுமென்ற ஆசை அவருக்கு ஏற்படக் காரணம் என்ன?

இலங்கையில் கிறிஸ்தவர்கள் ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் அனுபவித்து வந்த இன்னல்களையும், அவர்களது பரிதாப நிலையையும் சீனாவுக்குச் சென்று திரும்பும் வழியில் நேராகக் கண்டறிந்த ஒரு குருவானவர் சொல்லக்கேட்டு இந்தஆசை உதித்தது.

(4) 1685 இல் அவர் சேர்ந்த புதிய சபையின் பெயரென்ன?

தியான சம்பிரதாயச் சபை

(5) அவர் 1687 இல் எவ்வாறு இலங்கையை (யாழ்ப்பாணம்) வந்தடைந்தார்?

1686 இல் கோவை அதி மேற்றிராணியாரின் அதிகாரப்பத்திரம் பெற்றுக்கொண்டு, ஒரு யாசகனின் வேடம் பூண்டு, கன்னட இராச்சியம், மலையாளநாடு, தூத்துக்குடி ஆகியவற்றினூடாக 1687 இல் இரகசியமாக மன்னாரில் வந்திறங்கி பின் மே மாத இறுதியில் யாழ்ப்பாணம் வந்தடைந்தார்.

(6) யோசேவாஸ் முனிவர் தாம் யார் என்பதை எவ்வாறு வெளிப்படுத்தினார்?

கத்தோலிக்கர் யார்? பிறமதத்தினர் யார்? என்று கண்டு பிடித்தல் சிரமமாக இருந்ததால் அவர் வீடுவீடாகத் திரிந்து பிச்சை எடுத்து வந்தார். நம்பிக்கைக்குரிய ஒரு கத்தோலிக்கரைக் கண்ட பின்னரே தாம் யார் என்பதை வெளிப்படுத்தினார்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உரிமைக் குரல் ஆய்வரங்கு



(இவ் ஆய்வரங்கில் பரிமாறப்படும் கருத்துக்கள் மேலும் ஆராயப்படுவதற்குரியவை)

## வத்திக்கான் வானொலியில் (13-05-94 அன்று)

# யாழ். மக்களின் இன்னல்கள்

★ அருள்திரு S. V. B. மங்களராஜ்

*அமைதிக்கான ஏக்கம் அனைவர் மனதில் இருந்தாலும், இலங்கையின் உள்நாட்டுப்போர் விரைவில் முடிவுபெறும் என்ற நம்பிக்கை எவரிலும் இருப்பதாகத் தெரியவில்லை.*

*தொடர்ந்துகொண்டிருக்கும் உள்நாட்டுப் போரால் அதிக துன்பங்கள் அனுபவித்து வருபவாகள் அப்பாவிப் பொது மக்களே! உற்றார் உறவினர் நண்பர்களை இழந்து, உணவின்றி, உடையின்றி, கல்வியின்றி, அடிப்படை வசதியின்றி, எல்லாவற்றிற்கும் மேலாக அமைதியின்றி துன்புறும் இம்மக்களின் நிலை குறித்து அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பிய குரு மங்களம் உரைப்பதைக் கேட்போம்.*

பொதுவாக நோக்கின் யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் எப்பொழுதும் சமாதானத்தையே விரும்பியவர்கள், எப்போதும் விரும்புபவர்கள், பிறருடைய தயவில் வாழ விரும்பாதவர்கள். இன்று அவர்கள் மீது பலவந்தமாக ஒரு யுத்தம் திணிக்கப்பட்டு, பயங்கர தடைச் சட்டங்களாலும் பொருளாதாரத் தடைகளாலும் துன்புறுத்தப்படுகின்றனர். நீதியுடன் கூடிய சமாதானத்தைக் கேட்டதின் பரிசாக இவற்றையெல்லாம் அவர்கள் எதிர் நோக்கவேண்டியுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அதை அண்டியுள்ள பகுதிகளிலும் ஏறக்குறைய ஒருமில்லியன், அல்லது பத்து லட்சம் மக்கள் பல்வேறு நெருக்கடிகள் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். பலாலி, மண்டைதீவு, ஆனையிறவு ஆகிய இடங்களில் அமைந்துள்ள இராணுவ முகாம்களிலிருந்து திடீர் திடீரென ஏவப்படும் ''செல்''களினால் மரணமடைந்தவர்களும், காயமடைந்தவர்களும் எத்தனையோபேர்! குடாநாட்டைச் சூழவுள்ள கடலில் ரோந்து செல்லும் கடற்படை பீரங்கிப் படகுகளிலிருந்து ஏவப்படும் ஏவுகணைகளினால் உயிரிழந்த, காயமடைந்த மீனவர்களும், ஊர் மனைகளில் இறந்த பொதுமக்களும் எத்தனையோ பேர்! அவற்றுடன் திடீரென வானத்தில் தோன்றும் குண்டுவீச்சு விமானங்கள், அண்மைக் காலத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட 'சுப்பர் சோனிக்' குண்டு வீச்சு விமானங்கள் கிறிஸ்தவ இந்து வணக்கத் தலங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் யாழ்ப்பாண அரச செயலகம், சந்தை போன்ற மக்கள் கூடும் இடங்கள் மீது குண்டுகளைப் பொழிந்து பலர் கொல்லப் பட்டும் காயப்படுத்தப்பட்டும் இருக்கின்றனர்.

யாழ்ப்பாண மக்கள் அனுபவிக்கும் பல்வேறு இன்னல்களை இன்னும் கணிசமாக நோக்குவதற்கு சிறியோர் முதல் பெரியோர் வரை பல்வேறு வழிகளில் எவ்வாறு பாதிப்புக்குள்ளாகிறார்களென்று பார்ப்பது பொருத்தமாகும்.

[ இங்கு சிறுவர், மாணவர், இளைஞர், நோயாளிகள், போக்குவரத்து, கடிதப் போக்குவரத்து என்னும் தலைப்புகளிலே விபரிக்கின்றார். ]

தொடர்ந்து அவர் கூறுவதாவது:

**மக்களின் மனோநிலை:**

வடபகுதி மக்கள் நாட்டின் வரண்ட பகுதியில்தான் வாழ்பவர்கள். கஷ்டப்பட்டால் தான் வாழ்க்கையில் முன்னேறலாம் என்பதை நன்கு அறிந்தவர்கள். எனவேதான் இத்தனை பிரச்சினைகள், பொருளாதாரத் தடைகள் மத்தியிலும் இத்தனை வருடங்களா தாக்குப்பிடித்து வருகின்றனர். இதனால் இவர்கள் இப்படியே உறுதி தளராமல் இருப்பார்களென்ற பொருளல்ல. ஏற்கனவே இந்த அடக்கு முறையின் தாக்கங்கள் உடல், உளரீதியாக உணரப்படுகின்றன. குண்டு வீச்சுக்கள், ''செல்'' அடிகள், துப்பாக்கி வேட்டுக்கள் போன்றவை குழந்தைகளையும் சிறுவர்களையும் வெகுவாய்ப் பாதித்துள்ளன. எந்தச் சத்தத்தைக் கேட்டாலும் அவர்கள் அச்சமுள்ளவர்களாக, அல்லது வன்முறையில் துப்பாக்கி என்று அவற்றை நாடுபவர்களாக மாறுகின்றனர். நோயாளிகளும் இரத்த அழுத்தமுள்ளவர்களும் இவற்றால் பாதிக்கப் பட்டுள்ளனர். குடும்பத்தைச் சீராக பராமரிக்க முடியாது தற்கொலை செய்பவர்களுடைய எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது.

**சமாதானத் தீர்வு**

சமாதானமாக வாழ்வதைத் தான் எல்லோரும் விரும்புவதாகச் சொல்லுகிறார்கள். இதை அடைவதற்கு இதய சுத்தியுடன் எல்லோரும் செயல்படவேண்டியது தான் முக்கிய தேவையாகவுள்ளது. தாம் அனுபவிக்கும் உரிமைகளை சமத்துவ அடிப்படையில் மற்றவர்களும் அனுபவிக்க வேண்டுமென்ற ஆவல் எல்லோருக்கும் வரவேண்டும்.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தத்தால் யாருக்கும் எந்த நன்மையுமில்லை. எவ்வளவுக்கு இந்த யுத்தம் நீடிக்கின்றதோ அந்தளவுக்கு உயிர்ச் சேதமும் பொருள் சேதமும் மென்மேலும் இருண்ட எதிர் காலமும்தான் எஞ்சி நிற்பது. வருங்கால சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய இளைஞர், இளம் பெண்கள் பலியாகின்றனர். சிறுவர்களும்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

### 16-ம் ஆண்டு நினைவு



**திரு. இராசேந்திரம் முடியப்பு**
**(அண்ணாவியார்)**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17-12-1907 | 06-06-1978 |

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 6 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் படும்.

பாசமுடன் நினைவுகூரும்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

### 51-ம் நாள் நினைவு அஞ்சலி

திருமதி

**சிசிலியா போல் இரத்தினம்**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10-09-1909 | 10-04-1994 |

திருச் சிரசின் முள்முடிக் காயத்தினால் மிகவும் அவஸ்தைப் பட்ட இயேசுவே, இறை இரக்கத்தின் அரசே இவர்களுக்கு இரட்சகராயிரும், முடிவில்லாத பிரகாசம் இவர்களுக்குப் பிரகாசிக்கக்கடவது.

ஆமென்.

இரங்கற்திருப்பலி அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 30-05-94 திங்கட்கிழமை காலை 6 மணிக்கு யாழ். அடைக்கலநாயகி ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்

பிரிவால் வாடும்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

90/4C, Samagi Mawatha
Kawdana Road,
Dehiwela

[illegible]

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 8 | எம் விழிகளின் ஒளி யேசு |
|---|---|
| சுடர்: 9 | எம் வாழ்வின் வழி யேசு |

⚜ **வாழ்வளிக்கும் வார்த்தை** *சங். 125 : 3*
'' ஆண்டவர் நமக்கு மகத்தான காரியங்களைச் செய்தார் ''

## காவலன் களஞ்சியம் 94

### பார்வை I

பரிசுபெறும் நற்பேறாளர்

யேசுராசா — லூட்ஸ் சுயாதா அங் எண் 221

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் அன்பு விழியின் பாராட்டுக்கள்.

உங்களின் பங்களிப்பால் காவலனையும் காவலன் கண்மணிகளையும் வளர்க்கிறீர்கள். உங்கள் ''உணர்வுகள்'' எங்கள் உரமாகும்.

★ காவலன் களஞ்சிய வினாக்கள் காவலன் கண்மணிகள் மாத்திரம் பங்குபற்றுவதா? அல்லது வாசகர் அனைவரும் பங்கு பற்றுவதா?

க. லக்ஸி ஆண்டு 7

அனைவரும் பங்கு பற்றலாம்

★ மேலோட்டமாகப் படித்துவிட்டு வைக்கும் பாதுகாவலனை திரும்பவும் படிக்க உதவி புரிகின்றது. அறிவு வளர்கிறது.

மே. லூட்ஸ் சுயாதா அ. எ 221

☆ மிக மிக முக்கியமான எண்ணக் கருக்களைக் கொண்டிருப்பதுடன் அழியாத விசுவாச உண்மைகளாகவும் காணபபடுகின்றது.

இடவசதியின்மையால் ''உணர்வுகள்'' சுருக்கப்பட்டன. உங்கள் அனைவருக்கும் இறையேசுவின் ஆசி என்றும் உரித்தாகட்டும்.

அன்பின், அன்பு விழி

## படங்கள் தொடர்ந்து காட்டுவதால்! பார்ப்பதால்!!

# ஏற்படும் தீய விளைவுகள்

மூன்று, நான்கு, ஐந்து படங்கள் தொடர்ந்து காட்டுவதால் பல விபரீதமான விளைவுகள் ஏற்படுகின்றன.

ஒரு வீட்டில் இரவு படம் காண்பிக்கப்படுகிறது. பக்கத்து வீட்டில் ஒருமாணவன் தன் தந்தையிடம் ''அப்பா நான் படம் பார்க்கப் போகட்டோ'', என்று கேட்க, தந்தையோ அவனிடம், ''பேசாமல் இருந்து படி'' என்கிறார். ஆனால் அந்நேரத்தில் அவன் மனம் படிப்பில் செல்லாது. மாறாக அயல் வீட்டுப் படத்திலே செல்லும். இதனால் அவனது படிப்பிற்கு அது தடையாக உள்ளது. இன்னோர் வீட்டில் க. பொ. த. (சாதாரண / உயர்தர) பரீட்சை எடுக்கும் மாணவன் அல்லது பல்கலைக்கழக மாணவன் இருப்பானாகில், அவன் படிக்கும் போது அயல் வீட்டிலிருந்து வரும் படச்சத்தம் அவனது சிந்தனையை தடைசெய்து, அவனது படிப்பிற்கு இடைஞ்சலாக உள்ளது. வேறோர் வீட்டில் ஓர் நோயாளி / வயோதிபர் இருப்பாரே ஆனால் அவர்களுக்கும் அந்த அமைதியான சூழலை அயல்வீட்டுப் படச்சத்தம் நிம்மதியற்ற குழப்பமான சூழலாக மாற்றி ஓர் எரிச்சலை ஊட்டுகிறது. இன்னும் எத்தனை எத்தனையோவிதமான விளைவுகள் படங்கள் தொடர்ந்து காட்டுவதால் ஏற்படுகின்றன.

மூன்று, நான்கு, ஐந்து படங்கள் தொடர்ந்து பார்ப்பதாலும் பலவிதமான விளைவுகள் ஏற்படுகின்றன,

நீண்டநேரம் தொடர்ந்து பார்ப்பதால் நமது கண்கள் வெகு விரைவில் பாதிப்படைந்து பார்வை குறைகிறது. ஓர் படிக்கும் மாணவனாக இருந்தால் அவன் அடுத்தநாள் படிக்க முடியாது சோர்வாகக் காணப்படுவான். ஓர் தொழிலாளியானால் அவன் அடுத்தநாள் தன்கடமைகளை சுறுசுறுப்பாகச் செய்ய முடியாது சோம்பலாகக் காணப்படுவான். ஒரு நாள் இரவு நித்திரை கொள்ளாது படம்பார்த்த களைதீர ஒரு ஒரு கிழமையும் எடுக்கலாம். இதனால் நாமே எமது பொன்னான நேரத்தை மண்ணாக்கி காலத்தை வீணாகக் கடத்துகிறோம். அத்தோடு மூன்று, நான்கு, ஐந்து படங்கள் தொடர்ந்து பார்ப்பதால் கதைகள் யாவும் ஒன்றுடன் ஒன்று கலந்து விடுகிறது இதனால் படத்தின் மூலம் ஓர் நல்ல விடயத்தையாவது புரியமுடியாது இருக்கும். இன்னும் எத்தனையோ விளைவுகள் ஏற்படுகின்றன.

செல்வி மேரி மஞ்சுரிக்கா ஆனந்தராஜா
அ. எண் A/47,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் பராமரிப்பு நிலையம்

### "அணைக்கும் கரங்கள்"

# நடத்துனர் தேவை



"அணைக்கும் கரங்கள்" சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் பொறுப்பாளர் அருள் தந்தை இருதயதாஸ் அடிகளார் அவர்களுடன் அந் நிலையம் பற்றி அறிமுகம்

1. இந் வருடத்தில் யாழ். மறைமாவட்டத்தில் "அணைக்கும் கரங்கள்" சிறுவர் பராமரிப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்ட தன் நோக்கத்தை கூறமுடியுமா?
பெற்றோர்களை இழந்த பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு வளமாக அமையவும், அத்தோடு, மிருசுவில் பங்கில் அமைந்துள்ள சிறுவர் பராமரிப்பு நிலைய ஆண், பெண் இருபாலாருள், ஆண்கள் 5ஆம் வகுப்பிற்கு மேல் அங்கு கல்வியை தொடர முடியாத நிலையில், இங்கு ஆண்களுக்கான இல்லத்தை ஆரம்பித்துள்ளோம்.

2. இவ் இல்லத்தின், ஆரம்பம், தற்போதைய நிலைகள் பற்றி கூறமுடியுமா?
இவ் இல்லம், 1994ஆம் ஆண்டு, மாசி மாதம் 1ஆம் திகதி யாழ். ஆயர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இவ் இல்லம் 7 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது 12 பிள்ளைகள் பராமரிக்கப்படுகிறார்கள். இவ் இல்லம் யாழ். புனித யாகப்பர் ஆலயத்தின், பிரதான வீதி முன்பாக அமைந்துள்ளது.

3. இது போன்ற வேறு சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் யாழ் மறை மாவட்டத்தில் உள்ளனவா?
யாழ். ஆயர் அவர்களின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்டத்தில், பெண்களுக்கென உருத்திரபுரத்தில் இரண்டு இல்லங்களும், 8ஆம் வாய்க்காலில் ஆண்களுக்கென ஓர் இல்லமும், புதுக்குடியிருப்பு பங்கில் ஓர் இல்லமும் அமைக்கப்பட்டுள்ளது: யாழ்/ மாவட்டத்தில், மிருசுவில், யாழ்/நகர், இருபாலை, அரியாலை ஆகிய இடங்களிலும் இவ் இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

4. பிள்ளைகளின் தெரிவிற்கான சிபாரிசுகளை எப்படி மேற்கொள்ளுகின்றீர்கள் என்று கூற முடியுமா?
பங்குத்தந்தையின் சிபாரிசின் பேரில் தான் பிள்ளைகளை அனுமதிக்கின்றோம். அத்தோடு இதற்கென ஓர் குழுவும் மேற்றிராசனத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவே குருக்களின் சிபாரிசுகளை பரிசீலனை செய்து இறுதி தெரிவை மேற்கொள்கின்றது.

5. இவ் இல்லத்தின் அவசிய தேவைகள் பற்றியும், நீங்கள் கொண்டிருக்கும் புதிய திட்டங்கள் பற்றியும் கூறமுடியுமா?
அவசிய தேவையாக, இவ் இல்லத்தை ஒரு குருவானவர் நிர்வகிப்பதைவிட, ஓர் இளைப்பாறிய ஆசிரியர், அல்லது சேவை நலமும் தகுதிகளும் உள்ள ஒருவர் நடத்துவதை விரும்புகின்றோம். இந்த பொறுப்புக்கு ஒருவரை எதிர்பார்க்கின்றோம். முன்வந்தால் அதற்கென ஊதியமும் வழங்கப்படும். அத்தோடு இவர்களுக்கு ஓர் விளையாட்டு மைதானமும் தேவையாக இருக்கின்றது. மேலும் எதிர்காலத்தில் பிள்ளைகளின் திறமைக்கு ஏற்ப தொழிற்பயிற்சியும் கொடுக்க எண்ணியுள்ளோம்.

## யாழ் ஆயர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் எடுக்குமாறு யாழ். ஆயர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

இதற்கு முன்னதாகவே, யாழ் ஆயராகவிருந்த மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை பிரஸ்தாப பேராயத்திற்கு போதிய வரலாற்றுத் தகவல்களுடனும், ஆவணங்களுடனும் இறையடியார்கள் டொம் பேதுரு, மனுவல் டி சில்வா இருவர்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண வேத சாட்சிகள் எண்மரை புனித நிலைக்கு உயர்த்துமாறு விண்ணப்பித்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## திருமறைக் கலா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மையில் நடைபெற்ற இவ் வைபவத்தில், யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் பராட்டுரை வழங்கினார். இறுதியில் வீரமாமுனிவரின் இலக்கிய, மொழி, சமயப் பணிகள் பற்றிய கருத்தரங்கு இடம்பெற்றது.

## யாழ் மக்களின்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு பாதிப்புக்களுடன் வளர்கின்றனர். இப்படியான பாதிப்புக்கு உள்ளானவர்களைக் கொண்டு உருவாகும் எதிர்கால சமுதாயம் ஆரோக்கியமானதாயிருக்குமென்று சொல்ல முடியாது. நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படக் கூடிய பெருந்தொகையான பணம் வீணடிக்கப்படுகின்றது. நாள் செல்லச் செல்ல ஒரு நீதியான, சமாதானமான தீர்வு எடுக்கப்பட வேண்டியதின் தேவை கூடுதலாக உணரப்படுகின்றது. இதற்காக பொறுப்புள்ள அரசியல், மதத் தலைவர்கள், மற்றும் சமூக அமைப்புக்களின் தலைவர்கள் பாடுபடவேண்டும். சாதாரண மக்களும் சமாதானத்திற்கென இதய சுத்தியுடன் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு தமது ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

## பத்தே பத்து...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்டப்பட்ட அபிநயக் காட்சிகளில் அதிகம் புதுமைகள் இல்லாமல் அதிகமானவை எதிர்பார்த்தவையாகத்தான் அமைந்தன. பணம், பதவிக்காக அலைவது, இராணுவத்தைச் சாட்டிக் கொள்ளையடிப்பது, பிச்சைக்காரன் வடிவில் இயேசு போன்ற ஐடியாக்கள் வெறும் பழசு. மரிய கொறற்றி சம்பவம், சிறார்களுடனான பாடல் போன்றவை ரசிக்க முடிந்தவை.

சில நடிகர்களுக்கும், ஒளி அமைப்பாளர்களுக்கும் பயிற்சி போதாதென்பது தெளிவாகத் தென்பட்டது. வலப்பக்கம் ஒளி பாய்ச்ச வேண்டிய வேளையில் இடப்பக்கம் ஒளிபாய்ச்சியது, தனது காட்சி முடிந்ததென்பதை அறியாமல் மரிய கொறற்றி மேடையிலேயே கிடந்தது போன்றவை இதற்குச் சான்றுகள்.

பத்துக் கட்டளைகளும் இரண்டு அன்புக் கட்டளைகளுக்குள் அடங்கும் என்பதை இறுதிப்பாடல் வழியாக வெளிப்படுத்தியது நிகழ்ச்சிக்கு ஒரு முழுமையைக் கொடுத்தது. "இரண்டுக்குள் பத்து" என்பது மேலும் பொருத்தமான தலைப்பு. மொத்தத்தில் 'பத்தே பத்து' ரசிகர்களின் மனதில் பத்துக் கட்டளைகள் பிறந்த வரலாற்றையும் ஒவ்வொரு கட்டளையின் அர்த்தத்தையும் ஆழமாக பதிந்திருக்கின்றது என்பதே இது ஒரு வெற்றித்தயாரிப்பு என்பதற்கு சான்றாகும். இதனை நெறிப்படுத்திய திரு. பேர்மினஸ் அவர்களுக்கும் இணைந்து செயல்பட்ட கலைஞர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

திருமறைக் கலாமன்றத்தின் இத்தகைய முயற்சிகள் வளர்ச்சிப் பாதையில் மேலும் தொடரவேண்டும். இலைமறைகாயாக இருக்கின்ற மேலும் பல கலைஞர்களின் ஆற்றல்கள் வெளிக்கொணரப்பட வேண்டும்.

## "சேவை செய்வதற்காகவே நான் உயிர் வாழ்கிறேன்"

### ★ திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர்

தான் திருச்சபைக்குத் தொடர்ந்தும் சேவையாற்ற வேண்டும் என்ற நோக்கிலேயே அன்னை மரி தன்னைத் தொடர்ந்தும் பாதுகாத்து வருவதாக இத்தாலிய ஆயர்களுக்குக் கூறியுள்ளார் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர்.

கடந்த மார்ச் மாதம் 12ஆம் திகதி முதல் வரும் பெப்ருவரி 19ஆம் திகதி முடிவடையும், ஒன்பது மாத தேசிய மாநாட்டையொட்டி வெள்ளி (20-5-94) அன்று "சென் மேரி மேஜர்" பேராலயத்தில் கூடியிருந்த ஆயர்களுக்குச் செய்தியொன்றை அனுப்பினார் திருத்தந்தை. 13 வருடங்களுக்கு முன்னால் மே மாதம் தன் உயிரை பறிக்க இடம்பெற்ற முயற்சிகளில் நின்று அன்னை மரி தன்னை அற்புதமாகக் காப்பாற்றியதை இச் செய்தியில் குறிப்பிட்ட திருத்தந்தை, "சேவை செய்வதற்காகவே நான் உயிர் வாழ்கிறேன். அனைவரும் ஒன்றிணைந்து சேவையாற்றுவோம்" என ஆயர்களைக் கேட்டுக் கொண்டார்.

## மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள்

கெயிற்றி நாட்டின் இராணுவமும் அதன் உடன் உழைப்பாளர்களும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணைக்காக நிறுத்தப்பட வேண்டுமென்று மனித உரிமைக் கண்காணிப்பாளர்கள் அறிவித்தனர்.

கெயிற்றி நாட்டில் இடம் பெற்றுவரும் கொலைகள், மக்களைக் கடத்திச் செல்லல், கற்பழிப்பு, மற்றும் சித்திரவதைகள் அனைத்தும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் என்றனர் மனித உரிமைகளுக்கான அமெரிக்க ஐக்கிய நாட்டின் அங்கத்தினர்கள். இவ் அவை வெளியிட்டிருக்கும் அறிக்கையின்படி, பெப்ருவரிக்கும் மே மாதத்தில் இடைப்பட்ட காலத்துக்கு மட்டும், 32 கற்பழிப்புக் குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கெயிற்றிலிருந்து படகுகள் மூலம் வெளியேறி அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கு அடைக்கலம் தேடி புக முயல்வோரை உடனே திருப்பி அனுப்பாமல், அவர்களின் உண்மை நிலைமைகளை ஆய்வு செய்துவரும் அமெரிக்க அரசுத் தலைவர் பில் கிளின்ரனின் புதிய திட்டத்திற்கு மனித உரிமை அவை தனது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது.

## விவிலிய விநியோகம்

கிறிஸ்தவம் வேகமாகப் பரவி வரும் ஆபிரிக்க கண்டத்தில் கடந்த ஆண்டில் ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட விவிலியங்கள் விநியோகிக்கப் பட்டுள்ளன என்று ஐக்கிய விவிலியக் கழகங்கள் கூறுகின்றன.

ஆபிரிக்காவின் 68 கோடி 46 லட்சத்து 60 ஆயிரம் மக்கள் தொகையில், 9 கோடி 56 லட்சத்து 13 ஆயிரம் பேர் கத்தோலிக்கர்.

### நம் மண்ணில் பணிபுரிந்த குருக்கள்

## இறைபதம் அடைந்த தினம்

### நன்றியுடன்

## செபிப்போமாக

யூன்

| | | |
|---|---|---|
| 02 | H. S. டேவிற் * | 1981 |
| 04 | நோபேட் பெரேரா o.m.i. | 1950 |
| 05 | C. ஆசீர்வாதம் o.m.i. | 1948 |
| 05 | கென்றிக் வெரெட் o.m.i. | 1953 |
| 06 | மத். பார்லி o.m.i. | 1876 |
| 07 | S. கில்லறி o.m.i. | 1964 |
| 11 | C. செபஸ்ரியன் * | 1951 |
| 15 | S. வென்டர்கோன் o.m.i. | 1973 |
| 16 | F. லேடியர் o.m.i. | 1851 |
| 17 | யோண் லெபஸ்கோ o.m.i. | 1867 |
| 18 | J. B. பூலான் o.m.i. | 1944 |
| 19 | E. பொமிக்கோ o.m.i. | 1987 |
| 20 | S. இம்மானுவேல் o.m.i. | 1974 |
| 21 | M. லெபாஜ் o.m.i. | 1909 |
| 23 | J. B. பாக்கியநாதர் C. R. | 1985 |
| 24 | A. சியேப்கா o.m.i. | 1982 |
| 27 | ஆயர் D. D. T. மெலிசான் o.m.i. | 1905 |
| 28 | J. கிப்பொலியற் o.m.i. | 1919 |
| 30 | J. இசபெட் o.m.i. | 1904 |

( * யாழ் மறைமாவட்டக் குரு )

இப்பந்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org